## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – நாளை

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

### ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 6 -

'முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளையொட்டி நாளை (ஆகஸ்ட் 7) காலை 7 மணியளவில் கழகத் தலைவர் - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி சென்னை - அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில்அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். இதில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்றிடுமாறு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக , கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின்



ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", நாளை (ஆகஸ்ட் 7, வியாழக்கிழமை) காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.

இதில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணியினரும் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



திருவெறும்பூர் தொகுதியில் பொன்மலை பகுதி மக்களுக்காக அன்பில் அறக்கட்டளை மற்றும் அப்பல்லோ மருத்துவமனையுடன் இணைந்து மருத்துவ முகாமினை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் தர்மராஜ், மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் தமிழரசன், முகமது மன்சூர், மாமன்ற உறுப்பினர்கள் ரமேஷ், சீதாலட்சுமி முருகானந்தம், பியூலா மாணிக்கம் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

## முத்தமிழறிஞர் கலைஞரின் 7-ம் ஆண்டு நினைவு நாள்!

# திருப்பூர் கிழக்கு - திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மரியாதை செலுத்துவீர்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், ஆக.6 –

திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக, தமிழ் மக்களுக்காகவே தனது 14 வயதில் மக்கள் பணி தொடங்கி 95 வயது வரையில் தன் உயிர் மூச்சு வரை வாழ்ந்திட்ட பெருமகன், திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் கலைஞர் அவர்கள் 07.08.2018 ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்துச்





சென்றாலும், இன்றும் நம் ஊனோடும், உணர்வோடும் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார். நாளை (07.08.2025 – வியாழக்கிழமை) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை உள்ள இடங்களில் திருவுருவச் சிலைக்கும், திருவுருவச் சிலை இல்லாத இடங்களில் அவரது திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

அதுசமயம் இந்நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒருங்கிணைந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று நிகழ்ச்சிகளை சிறப்பித்து தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 7ம் ஆம் ஆண்டு நினைவு தினம்! புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# அறந்தாங்கியில் அமைதிப் பேரணி! கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

### தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக 6–

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூக நீதி கொள்கைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும். ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2024 – வியாழன்) காலை 8 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அதனை தொடர்ந்து எனது (எஸ்.ரகுபதி) தலைமையிலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அறந்தாங்கி அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று அண்ணா சிலை அருகில் அமைக்கப்பட்டிருக்கின்ற கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.



இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், அணிகளின் நிர்வாகிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞரின் 7-ம் ஆண்டு நினைவு நாள்!

# திருப்பூர் மத்திய மாவட்டத்தில் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மரியாதை!


### மத்திய மாவட்டச் செயலாளர் - க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஆக. 6–

திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தந்தை பெரியாரின் எண்ணங்களை, பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை, பெரியாரின் துணிவோடும், அண்ணாவின் கனிவோடும், செயலாற்றிய சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் 2018 ஆகஸ்ட் 7ம் தேதி இயற்கை உங்களை, எங்களை விட்டு பிரிய செய்தாலும், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று பேரறிஞர் அண்ணாவின் கூற்றின் படி அரசியல் எதிரிகளும், உங்களை புகழ்ந்தபோது மகிழ்ச்சியிலே திளைத்தவர்கள் நாங்கள், தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமல்ல, இந்தியாவின் வழிகாட்டி, பல பிரதமர்களையும், குடியரசு தலைவர்களையும், உருவாக்கி சாதனை படைத்த சரித்திர தமிழறிஞர் கலைஞர்.

தகைமைசால் தலைவராக – எழுத்தாளராக – கவிஞராக – சொற்பொழிவாளராக – திரைக்கதை வசன கர்த்தாவாக–இலக்கியவாதியாக



– திரைப்படத் தயாரிப்பாளராக – தலைசிறந்த நிர்வாகியாக – தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக – உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராகத் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (07.08.2025 – வியாழக்கிழமை) காலை 08.00 மணிக்கு மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலில் சந்தித்த இடமான திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் படுகிறது.

திருப்பூர் மத்திய மாவட்டம் முழுவதும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் ஊர் கிளை, வட்ட கிளை தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து அமைதி ஊர்வலமாகச் சென்று அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர்தொண்டர் அணி சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி,பொறியாளர் அணி, விவசாயஅணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வி.செந்தில்பாலாஜி தலைமையில் – கோவை தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7 ம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

### மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை!

கோவை, ஆக. 6–

கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக, தமிழ் மக்களுக்காகவே தனது 14 வயதில் மக்கள் பணி தொடங்கி 95 வயது வரையில் தன் உயிர் மூச்சுவரை வாழ்ந்திட்ட பெருமகன், திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் கலைஞர் அவர்கள் 07.08.2018 ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்துச் சென்றாலும், இன்றும் நம் ஊனோடும், உணர்வோடும் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்.

தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக – உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராகத் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு நாளினையொட்டி நாளை (07.08.2025 – வியாழக்கிழமை) காலை 09.00 மணிக்கு கோவை தெற்கு மாவட்டம், கருமத்தம்பட்டி நான்கு வழிச்சாலை



யில் இருந்து கொச்சின் அவினாசி சாலை வழியா அமைதி ஊர்வலமாக சென்று கணியூர் ஊராட்சி எல்லை கலைஞர் நூலகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் ஆகிய எனது தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப் படுகிறது.

கோவை தெற்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர மற்றும் ஊர் கிளை, வட்ட கிளை தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து அமைதி ஊர்வலமாகச் சென்று அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, வார்டு கழக செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி,பொறியாளர் அணி, விவசாயஅணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில் ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (04.08.2025) சேலம், புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சி திடலில் சேலம் அரசுப் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் (நினைவகங்கள்) கு.தமிழ்செல்வராஜன் ஆகியோர் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 7 வது ஆண்டு நினைவு நாள்:

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக அமைதிப் பேரணி!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, ஆக. 6 -

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுச் சென்று ஆறு ஆண்டுகள் நிறைவடைந்து ஏழாவது ஆண்டு நினைவு தினம் நாளை (07.08.2025 - வியாழக்கிழமை) அனுசரிக்கப் படுகிறது. இதனையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் 07.08.2025 வியாழக்கிழமை காலை 0900 மணிக்கு கிருஷ்ணகிரி, பெங்களூர் சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகிலிருந்து அமைதி பேரணி சென்று ராயக்கோட்டை மேம்பாலம் அருகே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, அன்னதானம் வழங்கப்பட உள்ளது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினர் அனைவரும் இந்த அமைதிப் பேரணியில் கலந்து கொண்டு முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அவரவர்கள் சார்ந்த பகுதிகளில் காலை 08.00 மணிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு வருகை தந்து இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.